# அமைச்சர் திரு மனோஜ் சின்ஹா அவர்களுடன் 24.2.2018 அன்று சந்திப்பு

**ஊதிய மாற்றம்: BSNL நிறுவனத்தின் தொடர் நஷ்டம் காரணமாக, BSNL ஊழியர்களுக்கு மூன்றாவது ஊதிய மாற்றம் இல்லை என்ற நிலைபாட்டினையே இதுவரை DOT எடுத்து வந்தது. 24.2.2018 அன்று நடைபெற்ற அமைச்சருடனான சந்திப்பிற்கு பின்னர் இந்த நிலை மாறியுள்ளது.. BSNL ஊழியர்களுக்கான மூன்றாவது ஊதிய மாற்றத்தினை DPE மற்றும் மத்திய அமைச்சரவையின் ஒப்புதலுக்கு கொண்டு செல்ல அமைச்சர் ஒப்புக்கொண்டார். ஊதிய மாற்ற பிரச்னையில் நிலவி வந்த தேக்க நிலையினை தகர்த்துள்ளோம் எனினும், அமைச்சரவையின் ஒப்புதல் கிடைக்கும் வரை நாம் விழிப்புடன் இருக்க வேண்டும்.**

**டவர் துணை நிறுவனம்: டவர் துணை நிறுவனம் என்ற பெயரில் BSNL-ன் 66000 டவர்கள் பறிக்கப்படுவது குறித்த அச்சத்தினை தொழிற்சங்கங்கள் அமைச்சரிடம் வெளிப்படுத்தின. BSNL-ன் துணை நிறுவனமாக அது இருக்கும் என்ற அமைச்சரவையின் முடிவு மீறப்பட்டிருப்பதையும், BSNL-க்கே தெரியாமல் ஒரு IAS அதிகாரி டவர் துணை நிறுவனத்தின் CMD-யாக நியமிக்கப்பட்டிருப்பதையும் சுட்டிக்காட்டின. இது பற்றிய அமைச்சரின் பதில் திருப்தியளிப்பதாக இல்லை. டவர் துணை நிறுவனம் மூடப்பட தேவையான வழிவகைகளை ALL UNIONS AND ASSOCIATIONS OF BSNL கண்டறிய வேண்டும்.**

**BSNL ஒய்வூதியர்களுக்கு ஒய்வூதிய மாற்றம்: மத்திய அரசு ஊழியர்களுக்கும் BSNL ஊழியர்களுக்கும் ஒய்வு ஊதியம் குறித்த விதிகள் ஒன்றே என்பதால் BSNL ஒய்வூதியதாரர்களுக்கு ஒய்வூதியம் மாற்றப்பட வேண்டும் என்று அமைச்சரிடம் அழுத்தமாக கூறப்பட்டது. இதன் மீது தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்த அமைச்சர், உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு DOT செயலரிடம் கூறினார்.**

**பென்ஷனுக்கான பங்களிப்பு: ஊதிய விகிதங்களின் உச்சத்தில் பென்ஷனுக்கான பங்களிப்பு கணக்கிடப்படுவதினை எதிர்த்து தொழிற்சங்கங்கள் அழுத்தமாக வாதிட்டன. DoPT-யின் 2006 உத்தரவினை பின்பற்றி, மத்திய அரசு ஊழியர்களுக்கு 1.1.2017 முதல் அவரவரது அப்போதைய ஊதியத்தின் அடிப்படையிலே பென்ஷனுக்கான பங்களிப்பு கணக்கிடப்படுவதை சுட்டிக்காட்டின. உத்தரவுகளின் அடிப்படையில் BSNL ஊழியர்களது பென்ஷனுக்கான பங்களிப்பினை பிடித்தம் செய்ய DOT செயலரிடம் அமைச்சர் பணித்தார்.**

**BSNL-க்கு 4G அலைக்கற்றை ஒதுக்கீடு: 4G சேவையை தராமல் தனியாருடன் போட்டியிடுவது BSNL-க்கு கடும் சிரமமாக இருக்கும் என்றும், BSNL நிர்வாகம் கேட்டுக்கொண்டபடி, BSNL-க்கு 4ஜி அலைக்கற்றையை ஒதுக்குமாறு அமைச்சரிடம் கோரப்பட்டது. 4G அலைக்கற்றை ஒதுக்க ஆவண செய்வதாக அமைச்சர் சாதகமாக பதிலளித்தார்.**

**ஓய்வு பெறும் வயதினை 60-ல் இருந்து 58-ஆக குறைக்கும் திட்டம்:** ஓய்வு பெறும் வயது குறைக்கப்படக்கூடாது என்று தொழிற்சங்கங்கள் வாதிட்டன. வயதை குறைக்கும் திட்டம் ஏதும் அரசுக்கு இல்லை என அமைச்சர் கூறினார்.

**2-வது ஊதிய மாற்றத்தின் போது விடுபட்ட பிரச்னைகள்:** 2-வது ஊதிய மாற்றத்தின் போது எழுந்த பல பிரச்னைகள் நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் நிலுவையில் உள்ளது சுட்டிக்காட்டப்பட்டது. அவற்றை பரிசீலிக்குமாறு அமைச்சர் DOT செயலரிடம் கூறினார்

இறுதியில், இவ்வனைத்து பிரச்னைகள் குறித்தும் தன்னையும், DOT செயலரையும் தொழிற்சங்கங்கள் மீண்டும் சந்திக்கலாம் என்று அமைச்சர் கூறினார்.

அமைச்சருடனான சந்திப்பிற்கு பிறகு ALL UNIONS AND ASSOCIATIONS OF BSNL தலைவர்கள் FNTO அலுவலகத்தில் கூடினர். பிரச்னைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து தங்கள் திருப்தியை வெளிப்படுத்திய அவர்கள், அதிகாரிகள் மற்றும் ஊழியர்களை மேற்கண்ட பிரச்னைகளின் மீது ஒன்று திரட்டியது மற்றும் கூட்டு போராட்டங்கள் ஆகியனவற்றால் மட்டுமே இது சாத்தியமாயிற்று என்று கூறி இயக்கங்கள் அனைத்திலும் பங்கேற்றவர்களுக்கு வாழ்த்துக்களை உரித்தாக்கினர்.

***********